செய்திவெளியீடு எண்.75/2019 நாள். 22.05.2019

பத்திரிக்கைச் செய்தி

**காஞ்சிபுரம் மாவட்டம் நாடாளுமன்ற மக்களவைக்கான பொதுத் தேர்தல் 2019 மற்றும் திருப்போரூர் சட்டமன்ற (இடைத்தேர்தல்) வாக்கு எண்ணும் மையத்தில் நுண் பார்வையாளர்களின் பணிகளை குறித்த பயிற்சியினை காஞ்சிபுரம் மாவட்டம தேர்தல் பார்வையாளர்கள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்களால் நடத்தப்பட்டது.**

காஞ்சிபுரம் மாவட்டம் நாடாளுமன்ற மக்களவைக்கான பொதுத் தேர்தல் 2019 மற்றும் திருப்போரூர் சட்டமன்ற (இடைத்தேர்தல்) வாக்கு எண்ணும் மையத்தில் நுண் பார்வையாளர்களின் பணிகளை குறித்த பயிற்சியினை காஞ்சிபுரம் மாவட்டம் தேர்தல் பார்வையாளர்கள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்களால் இன்று 22.05.2019 மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள மக்கள் நல்லுறவு கூட்டரங்கத்தில் நடத்தப்பட்டது.

06 காஞ்சிபுரம்(தனி) நாடாளுமன்ற தொகுதி மற்றும் 33, திருப்போரூர் சட்டமன்ற இடைத்தேர்தல் வாக்குகள் அனைத்தும் அண்ணா பொறியியல் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரியிலும் 05 திருப்பெரும்புத்தூர் நாடாளுமன்ற தொகுதிக்கு திருப்பெரும்புத்தூர் தண்டலம் இராஜலட்சுமி பொறியியல் கல்லூரியில் 23.05.2019 அன்று காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. இவ்வாக்கு எண்ணும் மையத்தில் நுண் பார்வையாளர்கள் பணியேற்ற வேண்டிய பணிகளை குறித்து பயிற்சி காஞ்சிபுரம் மாவட்ட தேர்தல் பார்வையாளர்கள் திருமதி. உதயாலட்சுமி IAS., அவர்கள் டாக்டர். யோகேஷ் பி. மகசி IAS., அவர்கள், திரு. டெபசிஸ்தாஸ் IAS., அவர்கள் திரு. மஜீனூர் உறீசைன் IAS., அவர்கள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்களால் நடத்தப்படடது. இப்பயிற்சியில் தேசிய மையத்தை சார்ந்த வங்கி பணியாளர்கள், கல்பாக்கம் அணுமின் நிறுவனம் மற்றும் பல்வேறு நிறுவனத்தை சார்ந்த பணியாளர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டார்கள்.

இப்பயிற்சி வகுப்பில் திருப்பெரும்புதுார் பாராளுமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என். சுந்தரமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.மா. நாராயணன், மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.அ.அமீதுல்லா மற்றும் அரசு துறையை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனார்.

மாவட்ட தேர்தல் அலுவலர்/<br>
மாவட்ட ஆட்சித்தலைவர்,<br>
காஞ்சிபுரம